தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, ஏப்ரல் 29, புதன்கிழமை.

சித்திரை 16, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி”.

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன; அதுபோல் குடிகள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 544 முதல் 548 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக்கொள்ளப் பெறு கின்றன.

சத்துவாச்சாரி—வேலூர் புறச்சாலை அமைத்தல்.

544—(*வினா எண் 7535) திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரி—வேலூர் புறச்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) விரைவில் தொடங்கப்பட உள்ளது.

[1987 ஏப்ரல் 29

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கிற வேலூர் நகரத்தில் புறச்சாலை மிகவும் அவசியம் என்று கருதி, தேசிய நெடுஞ்சாலையிலே புறச்சாலை அமைப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு ஏறக்குறைய ஓராண்டு நிறைவுற்றிருந்தாலும் இன்னும் அந்தச் சாலை வசதி செய்து தரப்படாமல் இருப்பதால் அங்கே அந்த நகரத்தின் உள்ளே பேருந்துகள் செல்வதற்கு—கடப்பதற்கு—ஏறக்குறைய 1 மணி நேரம் ஆகிறது. அதை உடனடியாக முடித்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. 16—4—1987-லே அதற்கு ஒப்புதலை மத்திய அரசாங்கம் தந்துள்ளது. எனவே, விரைவாக வேலையைத் துவக்க இருக்கிறோம். துவக்கியபின் நிச்சயமாகக் குறிப்பிட்ட காலத்திலே அது முடிக்கப்படும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புறச்சாலை வேலூரிலே இருக்கிற சத்துவாச்சாரியிலே முள்ளிப்பாளையம் பக்கத்திலே போய்ச் சென்றடைவதாக இருக்கிறது. இருந்தாலும்கூட அந்தப் புறச்சாலையைச் சற்று மாற்றி அமைத்தால் இன்னும் நீண்ட நாட்களுக்கு உண்டான திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கருதி பல்வேறு பகுதியிலே இருக்கிற இடங்களையெல்லாம் இப்பொழுது வீட்டு மனைகளாகப் பிரித்து, அந்த வீட்டு மனைகளினூடே அந்தச் சாலைகள் விரிவாக்கப் பணி தடைப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றினால்தான் அந்தச் சாலைகளுக்கு உரிய மரியாதை உரிய நேரத்திலே பொது மக்களால் கிடைக்கும். எனவே, அந்தச் சாலைப் பணியை விரைவுபடுத்தி, அந்தச் சாலையை முள்ளிப்பாளையத்தில் இருக்கிற பட்டுக்கோட்டை அழகிரி நிறுவனத்தினுடைய கட்டிடம் வரை மேலும் நீட்டித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அது முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ரூ. 34 இலட்சத்திலே இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ரூ. 15 இலட்சத்திலே நிலம் கையகப்

படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, என்ன திட்டம் இடப் பட்டதோ, எப்படி அந்தச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டதோ, அந்த வகையிலேதான் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது அதிலே சேர்ந்திருக் கிறதா இல்லையா என்பது எனக்கும் தெரியவில்லை. எனவே, ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி அந்தப் பணியை நாம் துவக்கலாம்.

திரு. கோ. இரகுபதி: தலைவர் அவர்களே, இந்தச் சத்துவாச் சாரி-வேலூர் புறச்சாலைக்கு நீண்ட நாட்களாகத் திட்டமிட்டு, அதற்கு அனுமதி பெறுவதற்கு மத்திய சர்க்காரை அணுகி, அதில் ஏற்பட்ட காலதாமதத்தை நம்முடைய தமிழக அரசு ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. அந்தக் காலதாமதம் மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டதா, அல்லது நம்மால் ஏற்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நாம் எடுத்துக் கொள்கிறபொழுது, அதனுடைய முழுமையான செலவு என்ன என்பதைப் பற்றி முழுமையாக நாம் ஆய்வு செய் வதில்லை. எனவே, அந்த ஆய்வு செய்யாத காரணத்தால், அரசாங்கம் கொள்கை அளவிலே அத்திட்டத்தை நிறைவேற்ற லாம் என்று ஏற்றுக்கொண்ட பின்பு மற்றைய ஆய்வுகளை மேற்கொள்கிறோம். எனவே, அந்த ஆய்வு எவ்வளவு காலம் நடக்க வேண்டுமோ, அதற்குரிய காலத்திலே முடிக்கப்பட்டி ருக்கிறது என்றாலும்கூட, திட்டம் துவக்குவதற்காக அரசாங் கம் உத்தரவிட்ட காலத்திலே இருந்து கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டதாக நமக்குத் தோன்றுகிறது. எனவேதான், முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது உத்தரவிட்டிருக்கிறார்கள். அரசாங்கம் அனுமதி அளிப்பதற்கு முன்னாலேயே அதனுடைய முழுமையான ஆய்வையும் செய்து முடித்து, முழுமையாக அரசாங்கத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்று இப்பொழுது உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அப்படி வருகின்ற பொழுது அரசாங்கம் உத்தரவிட்டு உடனடியாக வேலையைத் துவங்குவதற்கான வாய்ப்பு இந்த முறையிலே இப்பொழுது இருக்கிறது. இந்த நேர்வில் பழைய முறையைக் கடைப்பிடித்த காரணத்தால் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டதைப்போல் தெரிந்திருக்கலாமேயொழிய, அரசாங்கத்தினுடைய அனுமதி

வாங்கி மற்ற எல்லா ஆய்வுகளையும் செய்கிற அந்தக் காலத்தைத் தான் இவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி இப்போது நமக்குக் கிடைத்து விட்டது. எனவே, அந்த வேலையைத் துவக்குவதற்கு எந்தத் தடையும் இல்லை.

மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்தல்.

545—(*வினா எண் 11631) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்தி இரண்டு பேருந்துகள் மாறி செல்லும் பாலமாக மாற்றும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்த்தஞ்சை மாவட்டத்தின் ஏறத்தாழ பாதிக்கு மேற்பட்ட பகுதிகளுக்கு தஞ்சையிலிருந்து செல்ல வேண்டுமென்றால், இந்த மன்னார்குடி கீழ்ப்பாலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பஸ் போக்கு வரத்துக்கும், மற்றப் போக்குவரத்துகளுக்கும் இடையூறாக இருப்பதால் அந்த மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்த இந்த ஆண்டாவது அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகப் பழைய பாலமாக இருக்கிறது. எனவே. அதை அகலப்படுத்துவது என்பது சரியாக இருக்காது. புதிய பாலம் தான் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு 42 லட்ச ரூபாய் ஆகும் என்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்துக்கொள்ள நிதிவசதி இல்லாத காரணத்தினால் வருகிற ஆண்டிலே அதைப்பற்றி யோசிக்கலாம்.